பக்கங்கள் 22

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 16 திங்கட்கிழமை 01.09.2025 | அதிர்வு 31

## எரிபொருள்களின் விலைகள் குறைப்பு



இலங்கை கனிய வளக் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்தின்படி நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில்

02

# பாதாள உலகக் குழுவினரை விசாரிக்க 72 மணி நேர தடுப்புக் காவல் உத்தரவு



இந்தோனிசியாவில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ள பாதாள உலகத் தலைவர்கள் ஐவரையும் 72 மணி நேரம் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றத்தில் இருந்து தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளது.

இதன்படி, தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவின் காவலில் உள்ள கெஹெல்பத்தர பத்மே, கமாண்டோ சலிந்த, பாணந்துறை நிலங்க ஆகியோரையும், மேல் மாகாண வடக்கு குற்றப் பிரிவுக் காவலில் உள்ள பெக்கோ சமன், தெம்பிலி லஹிரு ஆகியோரையும் 72 மணி நேரம் தடுத்து வைத்து விசாரிக்க நேற்று நீதிமன்றத்தில் இருந்து தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளது.

# அநுர இன்று யாழ். வருகை



## பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பார்

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றார். அவர் இங்கு பல்வேறு அபிவிருத்திப் பணிகளைத் தொடக்கி வைக்கவுள்ளார்.**

**ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு வருட காலம் பூர்த்தியாவதை முன்னிட்டு தொடங்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் ஆரம்ப நிகழ்வுக்காகவே அவர் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.**

**ஜனாதிபதியின்நிகழ்ச்சிநிரலின் படி, இன்று காலை 8.30 மணிக்கு மயிலிட்டியில் மீன்பிடித் துறைமுகஅபிவிருத்திப்பணிகளைஆரம்பித்து வைப்பார்.**

02

## கோட்டா நாடு திரும்பிய பின்னரே சி.ஐ.டி. விசாரணை



வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய பின்னரே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வாக்குமூலம் பெறப்படும் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு மே மாதம் கொழும்பு காலிமுகத்திடலில் போராட்டம் நடத்தியவர்கள் மீதான தாக்குதலைக் கட்டுப்படுத்தத் தவறியது

03





இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பாக திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு இன்று மன்றில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது.

வழக்கின் எதிர்மனுதாரர்களில் ஒருவராகக் குறிப்பிடப்பட்ட கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அந்தப் பதவியில் இருந்து விலகிய நிலையில், காலமாகிவிட்டார். இப்போது தலைவராக சீ.வி.கே. சிவஞானம் செயற்பட்டு வருகிறார். அவரை மாவையின் இடத்துக்கு ஓர் எதிர்மனுதாராகச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை இன்றைய வழக்கு அமர்வில் இடம்பெறும் எனத் தெரிகின்றது.

03



# சஜித்தை மன்னித்த ரணில்



## ஐ.தே.க. மாநாட்டுக்கும் அழைப்பு

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகிச் சென்று ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொண்ட உறுப்பினர்கள் உட்பட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மீது விதிக்கப்பட்ட இடைநிறுத்த உத்தரவை நீக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது எனக் கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கை ஒற்றுமையை நோக்கி எடுக்கப்பட்ட முதல் படி என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தகவல்கள் கூறுகின்றன.

இதனிடையே ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட்டுக்கு அனைத்து உறுப்பினர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் அழைக்கப்பட்டுள்ளனர்.



# பசறையில் வீடொன்றில் இருந்து 2 இளைஞர்களின் சடலங்கள் மீட்பு!

பசறையில் ஒரு வீட்டினுள் இரண்டு இளைஞர்களின் சடலங்களைப் பொலிஸார் நேற்று கண்டுபிடித்துள்ளனர்.

இறந்தவர்கள் 28 மற்றும் 33 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பசறை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது இந்தச் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மரணத்துக்கான காரணம் குறித்து மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**எரிபொருள்களின்...**

எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலையாக 283 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 12 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலையாக 313 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலையாக 299 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 341 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 185 ரூபாவாகவும் மாற்றமின்றி பேணப்படுகின்றது.

**அநுர இன்று...**

தொடர்ந்து, காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் கடவுச்சீட்டு பணிமனையை ஆரம்பித்து வைப்பார். அங்கிருந்து, யாழ். பொது நூலகத்துக்கும் அவர் செல்வார்.

இதன் பின்னர், மதியம் 1.30 மணியளவில் மண்டைதீவில் அமையவுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதான நிர்மாணப் பணிகளைத் தொடக்கி வைப்பார். அத்துடன், வேறு சில நிகழ்வுகளிலும் சந்திப்புக்களிலும் ஜனாதிபதி ஈடுபடுவார்.

இதைத் தொடர்ந்து நாளை செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவுக்குச் செல்லும் ஜனாதிபதி அநுரகுமார, வட்டுவாகல் பாலத்தின் புனரமைப்புப் பணியைத் தொடக்கி வைப்பார். அத்துடன், தென்னை முக்கோண வலயப் பணிகளையும் அவர் ஆரம்பித்து வைப்பார்.

# செம்மணி மனிதப் புதைகுழியை பார்வையிடுவாரா ஜனாதிபதி?

யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தரும் ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க செம்மணி – சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியைப் பார்வை யிடுவாரா என்று எதிர்பார்ப்பு எழுந் துள்ளது.

பல்வேறு அபிவிருத்திப் பணிகளைத் தொடக்கி வைப்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

முன்னதாக, "யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி அநுரகுமார, செம்மணி – சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியையும்



பார்வையிடலாம்." – என்று அமைச் சர் இ. சந்திரசேகர் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், இது தொடர்பில் செம்மணி – சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பாகப் பாதிக்கப்பட் டோர் சார்பில் முன்னிலையாகும் சட் டத்தரணி எஸ். நிரஞ்சனிடம் கேட்ட போது, "அவ்வாறான தகவல் எதுவும் இதுவரை (நேற்று வரை) நீதிமன் றத்துக்கு அறிவிக்கப்படவில்லை." – என்று கூறினார்.

இந்தநிலையில், இன்றும் செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணிகள் தொடர்ந்து நடைபெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரகசியம் பரகசியம்...

எதிர்மனுதாரர்களுள் ஒருவராக சீ.வி.கே. சிவஞானம் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் அவர் இந்த வழக்கு தொடர்பாக தமது பதில் மனுவைத் தாக்கல் செய்வதற்கு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கி வழக்கை இன்று ஒத்தி வைக்கும் என எதிர்பார்க்கலாம்.

சீ.வி.கே.சிவஞானம் சார்பில் இன்று மன்றில் சட்டத்தரணி கேசவன் சயந்தன் முன்னிலையாவார் எனத் தெரிகிறது.

அதற்கு மேல் இன்றைய வழக்கு விசாரணையில் வழக்கு மேலும் முன் நகர்வதற்கான வாய்ப்புகள் இருப்பதா கத் தெரியவில்லை.

***

நேற்று கொழும்பில் அகமத்தாக ஒரு பழைய நண்பரைச் சந்தித்தேன். அவர் ஜாதகம், சோதிடம், கணிப்பு போன்ற வற்றில் அதிக ஈடுபாடு காட்டுபவர். அதே நேரம் உள்ளூர் மற்றும் சர்வதேச அரசி யலிலும் சற்று விவரம் தெரிந்தவர் தான்.

காலி வீதியில் எதிரும் புதிருமாக வரும்போது நேற்று மாலை சந்தித்துக் கொண்டோம். என்னைக் கண்டதும் காத்திருந்தவர் போல ஒரு கேள்வியைத் தொடுத்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க வின் நட்சத்திரம், ராசி தெரியுமா என்று அவர் என்னைக் கேட்டார்.

நான் உதட்டைப் பிதுக்கினேன். ஆனால் அவர் விடவில்லை. அடுத்து ஒரு கேள்வியை தொடர்ந்தார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் நட்சத்திரம், ராசியாவது தெரி யுமா என்று அடுத்த கேள்வியை போட்டார்.

எனக்கும் சோதிடத்துக்கும் வெகு தூரம் என்று சொன்ன நான், மனைவி, பிள்ளைகளின் நட்சத்திரங்களே எனக்கு நினைவில் இருப்பதில்லை. இதற்குள் அநுரகுமார திஸநாயக்க, டொனால்ட் டிரம்ப் போன்றோரின் நட்சத்திரங்களை ராசிகளை என்னிடம் கேட்டால் நான் என்ன சொல்வது – என்று காட்டமாக ஒரு பிடி பிடித்தேன்.

ஆயினும் ஜோதிடம் பற்றி அனுபவ பூர்வமாக பேசுபவர் என்பதால் சற்று மரியாதை கொடுத்து இணையத்தில் தேடினால் கிடைக்கும் என்றேன். அப்ப டியா என்று கேட்டு இணையத்தில் தேடப் புறப்பட்டவர் போல் நகர முற்பட்ட அவரை மறித்தேன். வாயைக் கிளறினேன்.

"அது சரி அநுரா, டிரம்ப் ஆகிய இரு வரின் நட்சத்திரங்கள், ராசிகளைக் கேட் கிறீர்கள். ஏன் இருவருக்கும் சாத்திரம் சொல்லப் போகிறீர்களா?" என்று நான் நோண்டினேன்.

அவர் உடனே சீரியஸானார். ஒரு விளக்கமும் சொன்னார். அதை வாச கர்களுடன் பகிர்வதற்குத்தான் இந்தப் பீடிகைகள் எல்லாம். அவர் சொன்ன விடயத்தை அவர் வார்த்தைகளிலேயே போடுகிறேன்.

"அநுர – ட்ரம்ப் இரண்டு பேருக்கும் ஒரே ராசிதான் என்பது போல என்று எனக்குத் தோன்றுகின்றது." – என்றார் அவர்

"ஏன் அப்படிச் சிந்திக்கிறீர்கள்?" – என்று கேட்டேன்.

"இல்லை, இருவரும் ஒரே மாதிரித் தங்களுக்குத் தாங்களே வினையைத் தேடி வைத்துக் கொண்டு நிற்கிறார்கள். உலகம் அமெரிக்காவை சர்வதேச பொலிஸ்காரனாக ஏற்றுக்கொண்டு மரியாதை செய்து கொண்டுதான் இருந்தது. தேவையில்லாமல் உலக நாடுகள் பலவற்றுக்கும் அளவுக்கு அதிக மாக வரி விதிக்கப் போய், இப்பொழுது பலம் உள்ள நாடுகள் – இந்தியா, சீனா, ரஷ்யா, பிரேசில் போன்ற பெரிய நாடுகள் – தங்களுக்குள் ஒன்று சேர்ந்து அமெ ரிக்காவுக்கு எதிராக, அமெரிக்கா தலை மையிலான நேட்டோ நாடுகளுக்கு மாறாக, 'பிரிக்ஸ்' என்ற தேசங்களின் கட்டமைப்பை விருத்தி செய்து கொண்டு போகின்றன. அமெரிக்க டொலருக்குப் பதிலாக பிரிக்ஸ் ஒரு பொது நாணயத்தை களம் இறக்கப் போகிறது. இந்தியா கூட சீனாவுடனான முரண்பாடுகளை தூக்கி ஒதுக்கி வைத்து விட்டு, சீனாவுடன் சேர்ந்து அமெரிக்க ஆதிக்கத்தை முறியடிக்கத் துணிந்து களமிறங்கி இருக்கின்றது. ஆக, தன் வாயால் – தன் நடவடிக்கை யால் – தன்னையும் தனது நாட்டையும் சிக்கலில் கொண்டு போய் மாட்டி இருக்கி றார் ட்ரம்ப். அவரது நாட்டின் டொலர் மிக விரைவில் மதிப்பை இழக்கும் என்றே தோன்றுகின்றது" – என்றார் அவர்.

"அதே வேலையைத்தான் அநுரகுமார திஸநாயக்கவும் செய்திருக்கிறார். சும்மா இருந்த ரணிலைக் கைது செய்து, எதிர்க்கட்சிகளைத் தங்களுக்குள் உள்ள வேறுபாடுகளை மறந்து, அரசுக்கு எதி ரான வலுவான கட்டமைப்பாய்த் தங்களை மாற்றுவதற்கு தயாராகிவிட்டன. ட்ரம்பைப் போல எதிர்த்தரப்புக்களை தேவை யில்லாமல் உசுப்பேத்தி, தான் பின் னடைவு காணும் நிலைக்கு அநுரகுமார திஸநாயக்க சென்று இருக்கிறார். அத னால் தான் சொல்லுகிறேன், அநுரா விற்கும் ட்ரம்புக்கும் ஒரே ராசி பலன்தான் பெரும்பாலும்." – என்று தமது குட்டி லெக்ஸரை முடித்தார் அவர்.

அவரது கருத்தில் ஏதோ ஒரு நியா யப்பாடு இருப்பதாக எனக்கு தோன்று கின்றது. உங்களுக்கு அப்படி படவில் லையா வாசகர்களே....?

---

### கோட்டா நாடு...

தொடர்பாக முன்னாள் பொலிஸ்மா அதி பர் தேசபந்து தென்னக்கோன் அளித்த வாக்குமூலம் தொடர்பில் விசாரணை நடத்தவே கோட்டாபயவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முன்பதாக அவர் அழைக்கப்பட்ட திகதி குறித்த தகவல் வெளியாகாத நிலையில், அவரது வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் நிறைவடைந்ததையடுத்து வாக்குமூலம் பெறப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சட்டியும் பானையும்

# நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமல்ல, நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும். அது நீதியின் மீது - நீதித்துறையின் மீது - மக்கள் நம்பிக்கை வைப்பதற்கு மிக முக்கியமானதாகும்.

அடுத்த விடயம் -

# கணக்குப் பிள்ளை பேசக் கூடாது. கணக்கு புத்தகம் பேச வேண்டும் என்பார்கள். கணக்குப் புத்தகம் சரியாக இருந்தால்தான் அதன் மீது நம்பிக்கை வைக்க முடியும்.

இப்போது தமிழர் தேசத்தின் பல பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்படும் மனிதப் புதைகுழிகள் தொடர்பில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சரும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்கா தெரிவிக்கும் கருத்துக்கள் தொடர்பில் மேற்படி இரண்டு விடயங்களையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இலங்கையில் செம்மணியில் மட்டுமன்றி கொக்குத்தொடுவாய், மண்டைதீவு, மன்னார், கொழும்புத் துறைமுகம் எனப் பல இடங்களில் மனிதப் புதைகுழிகள் இருக்கின்றன என்று கூறும் அமைச்சர் பிமல் ரத்நாயக்கா, இந்தப் புதைகுழிகளின் உரிமையாளர்கள் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ராஜபக்ஷகளே தவிர தாம் அல்லர் எனவும் இப்போது கூறுகின்றார்.

தமிழர் பிரதேசத்தில் ஆள்கள் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்ட கொடூரம் சந்திரிகா, மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க போன்றோர் அதிகார பீடத்தில் இருந்த அரசுகளின் காலத்தில் தாராளமாக நடைபெற்றன என்பதும், கண்டுபிடிக்கப்படுகின்ற மனிதப்புதைகுழிகள் இந்தக் காலங்களைச் சேர்ந்தவை எனச் சந்தேகிக்கப்படுகின்றமையும் உண்மைதான். ஆனால் அந்தக் குற்றச்சாட்டுகளை வெறுமனே ரணில் மற்றும் ராஜபக்ஷக்கள் மீது சுமத்தி விட்டு, ஜே.வி.பியினர் தப்பி விட முடியாது. வடக்கில் ஆள்கள் பல நூற்றுக்கணக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட கொடூரம் அரங்கேறிய காலங்களில், சந்திரிகா அரசுக்கு முண்டு கொடுத்த ஜே.வி.பி., அந்த அரசில் இடம் பெற்றிருந்த பிமல் ரத்நாயக்கா போன்றவர்கள் இப்போது பொறுப்பை மற்றவர்கள் மீது தள்ளித் தாம் தப்பி பிழைக்க முயல்வது பெரும் அபத்தமாகும்.

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு நீதி, நேர்மையான, சட்ட ரீதியான நிவாரணங்களை பெற்றுக் கொடுக்கும் உண்மையான செயற்பாட்டில் சந்திரிகா, மஹிந்த, மைத்திரி, கோட்டாபய, ரணில் யாருமே நேர்மையுடன் நடக்கவில்லை என்பது எவ்வளவு தூரம் உண்மையோ அதேபோன்ற நிலைமையில்தான் அதிகாரத்துக்கு வந்திருக்கின்ற தேசிய மக்கள் சக்தி அரசும் கடந்த ஒரு வருட காலத்தில் செயற்பட்டு இருக்கின்றது என்பது வெளிப்படையானது.

பாதிக்கப்பட்ட பல்லாயிரம் தமிழர்களுக்கு நீதி தேடிக் கொடுக்கும் விடயத்தில் முன்னைய அரசுகள் போல அச்சொட்டாக தமிழர்களை ஏமாற்றும் விதத்தில்தான் இந்த அரசும் நடந்து கொள்கிறது.

தமிழர்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்கும் விடயத்தில் சற்றேனும் நம்பிக்கை தரும் போக்கில் கடந்த ஓராண்டாக அநுரகுமார திஸநாயக்காவின் அரசு நடக்கவே இல்லை என்பதுதான் தமிழ் மக்களின் பட்டறிவு.

தமிழ் மக்களுக்கு எதிராகப் பெரும் போரையும் யுத்தக் குற்றங்களையும் மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களையும் மனித உரிமை மீறல்களையும் இனவழிப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுத்த முன்னைய அரசுகளுக்கு முண்டு கொடுத்துவிட்டு இப்போது வந்து நின்று அந்த அரசுகளைத் திட்டித் தங்களைப் பரிசுத்தவான்களாகக் காட்ட முயலும் பிமல் ரத்நாயக்காவின் போக்கை பார்க்கும் போது 'சட்டியைப் பார்த்து பானை கறுப்பு எண்டதாம்' என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகின்றது.

# பாதாளக் குழுக்களை விரைவில் முடிவுக்கு கொண்டு வருவோம்

## அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிப்பு



“அரசியல்வாதிகளுக்கும், பாதாள குழுக்களுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு உண்டு. கைது செய்யப்பட்ட வர்களிடம் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பாதாள குழுக்களை வெகுவிரைவில் முடிவுக்கு கொண்டு வருவோம்.”

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரி வித்தார்.

கெஹல்பத்தரே பத்ம, கமாண்டர் சலிது உள்ளிட்ட பாதாள குழுவினர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கை யில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களின் பிரதான நபர்களாக செயற்பட்ட கெஹல் பத்தரே பத்ம, கமாண்டர் சலிது உட்பட குற்றவாளிகள் ஐந்து பேரை நாட்டுக்கு கொண்டு வந்துள்ளோம். குற்றப் புலனாய்வு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு தொடர் விசாரணைகள் முன்னெடுக் கப்படுகின்றன.

பாதுகாப்பு தரப்பினர் எவ்வித மான அரசியல் தலையீடுமில்லாமல் செயற்பட்டதன் காரணமாகவே இவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அரசியல் வாதிகளின் ஆசிர்வாதத்துடன் தான் பாதாள குழுவினர்கள் செயற்பட்டனர். அரசியல்வாதிகள் தங்களின் அதி காரத்தை தக்கவைத்துக் கொள்வதற் காக பாதாள குழுக்களை பயன்படுத்திக் கொண்டனர்.

அரசியல்வாதிகளுக்கும்,பாதாள குழுக்களுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு உண்டு.கைது செய்யப்பட்ட வர்களிடம் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.பாதாள குழுக்களை வெகுவிரைவில் முடிவுக்கு கொண்டு வருவோம் என்று நாட்டு மக்களுக்கு உறுதியளிக்கிறோம்.” என்றார்.



# சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் சிற்றுண்டிச்சாலை குறித்து விசாரணை

கொழும்பு சீமாட்டி சிறுவர் மருத்துவ மனையில் மருத்துவர்களுக்காக நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலை முறை யான விலைமனு கோரல் இன்றி தனி யாருக்கு வழங்கப்பட்டதாக முறைப் பாடு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சின் கொள்முதல் குழு, விசேட விசாரணை ஒன்றை ஆரம்பித்துள்ள தாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரி விக்கின்றன.

முன்பதாக உணவகத்தை நடத்தி வந்த தரப்பினரைக் கடந்த 25 ஆம் திகதிக்குள் வெளியேறுமாறு தெரி விக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதனிடையே புதிய தரப்பினருக்கு இன்று சிற்றுண்டிச்சாலையை நடத் துவதற்கு எவ்வித விலைமனு கோரலும் இன்றி வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் அளிக் கப்பட்ட முறைப்பாட்டையடுத்து விசேட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் லஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடளிக் கப்பட்டுள்ளதாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே கடந்த 25 ஆம் திகதி முதல் சிற்றுண்டிச்சாலை மூடப்பட்ட தால் மருத்துவர்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என தெரிவிக் கப்படுகிறது.



# ஓய்வூதியத்தை இரத்து செய்யும் யோசனையை சட்ட ரீதியில் எதிர்க்க முன்னாள் எம்.பிகள் தயார்

தங்கள் ஓய்வூதியத்தை இரத்து செய்யும் நோக்கில் முன்கொணரப்படும் யோசனையை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டபூர்வமாக எதிர்க்கத் திட்டமிட்டுள்ளனர்.

இதற்கிடையில், ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை இரத்து செய்வதை நோக்கமாகக் கொண்ட வரைவு யோசனை, தற்போது, சட்ட மாஅதிபரின் பரிசீலனையில் உள்ளது என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமார் 500 பேரும், கணவர்மாரை இழந்த 150 பெண்களும் பாதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சராசரியாக, ஓய்வுபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இறந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனைவியருக்கு ஓய்வூதியத்திற்காக மாத்திரம், அரசாங்கம் மாதத்திற்கு சுமார் 27 மில்லியன் ரூபாயை செலவிடுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஓய்வுபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் இரத்துச் செய்யப்படுமானால், ஒரு தொகை நிதியை சேமிக்கமுடியும்.

எனினும், இது நாட்டை நேசிக்கும் பல படித்த மற்றும் அர்ப்பணிப்புள்ளவர்கள், அரசியலில் நுழைவதைத் தடுக்கும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# மின் வேலியில் சிக்கி விவசாயி உயிரிழப்பு

பன்றிக்கு வைத்த மின் வேலியில் தானே சிக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அம்பனை, துர்க்காபுரம், தெல்லிப்பளையைப் சேர்ந்த குணரட்ணம் சிவகுமார் (வயது 64) என்பவராவார்.

மேற்படி நபர் கிளானை என்னும் இடத்தில் இரண்டு மரவெள்ளி தோட்டத்தை செய்து வந்ததாகவும் இதில் ஒரு தோட்டத்திற்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு பன்றிக்கு மின் வேலி வைத்துவிட்டு, மறதி காரணமாக மின்னை துண்டிக்காமல் சென்றுள்ளார்.

இந்நிலையில் சனிக்கிழமை மாலை தோட்டத்திற்கு மீண்டும் சென்ற போது மின்சாரம் தாக்கி அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை தெல்லிப்பளை பொலிஸார் நெறிப்படுத்தினர்.





# இதய நுரையீரல் மருத்துவ அதிகாரிகளின் மேலதிக நேர கொடுப்பனவு அதிகரிப்பு

இதய நுரையீரல் மருத்துவ அதிகாரிகளின் மேலதிக நேர கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் வெளியிட்டுள்ள சுற்றுநிருபத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் தர இதய நுரையீரல் மருத்துவ அதிகாரிகளுக்கான மேலதிக நேர கொடுப்பனவு 151 ரூபாவினாலும் இரண்டாம் தர இதய நுரையீரல் மருத்துவ அதிகாரிகளின் மேலதிக நேர கொடுப்பனவு 65 ரூபாவினாலும் அதிகரிகப்பட்டுள்ளது.

அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு கடந்த ஏப்ரல் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் நிலையில், இதற்கான நிலுவைத்தொகை செப்டம்பர் மாத சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# இந்த அரசாங்கம் விவசாயிகளின் வாழும் உரிமையைப் பறித்துவிட்டது

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



தற்போதைய அரசாங்கம் விவசாயிகளின் வாழும் உரிமையையும், பயிர் செய்யும் உரிமையையும் பறித்துவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

மொனராகலை பகுதியில் விவசாயிகளின் காணிப் பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடலின் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சேனைப் பயிர் செய்கையில் ஈடுபட்டுள்ள மக்களின் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரவுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த விவசாயிகள் மானியங்களையோ அல்லது நிதி உதவியையோ கேட்கவில்லை. மாறாக பல தசாப்தங்களாக தாங்கள் பயிரிட்டு வரும் நிலத்தின் மீதான உரிமையைக் கேட்கின்றனர்.

சோளம், தர்ப்பூசணி மற்றும் வெண்டிக்காய் ஆகியவற்றைப் பயிரிடுகின்ற 5,000 முதல் 6,000 குடும்பங்கள், 25,000 ஏக்கரில் பல தசாப்தங்களாக பாரம்பரியமாகப் பயிரிட்டு வருகின்றனர்.

அவர்கள் தமது சேனைப் பயிர்ச் செய்கையின் நிலத்துக்கான உரிமையைக் கோரி நிற்கின்றனர்.

இந்த விவசாயிகள் வாழும் உரிமை, வாழ்வாதாரம் மற்றும் விவசாயம் செய்யும் உரிமையைக் கோரி நின்ற போதிலும், இன்று அது பறிக்கப்பட்டுள்ளது.” என்றார்.



















# மூதூர் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு திறன் மேம்பாடு வழிகாட்டல் செயலமர்வு

(ஏ.எச்.ஹஸ்பர்)

மூதூர் சிவில் ஒன்றியத்தின் (MCF) பூர்வாங்க ஏற்பாட்டில் மூதூர் பிரதேச சபையின் ஒத்துழைப்புடன் இம்முறை சபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மூதூர் பிரதேச சபை உறுப்பினர்களுக்கான 'Good Governance & Capacity Building "நல்லாட்சி மற்றும் திறன் மேம்பாடு" எனும் கருப்பொருளிலான ஒரு நாள் செயலமர்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை திருகோணமலை இந்து கலாச்சார கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன் போது கலந்து கொண்ட மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் சபை உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு, எவ்வாறு மக்களுக்கு பொறுப்பான முறையில் கடமையாற்றுவது, திட்டமிடலுடனான பிரதேச அபிவிருத்திகளை மேற்கொள்வது மற்றும் மக்கள் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எவ்வாறு வழங்குவது தொடர்பான வழிகாட்டல் மற்றும் செயற்பாட்டுடனான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சம்மாந்துறை முன்னாள் பிதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌசாத் மற்றும் பிரதம வளவாளராக நடசேன் சுரேஷ் (பணிப்பாளர் – ஊவா சக்தி பவுண்டேஷன்) ஆகியோரும் மூதூர் சிவில் ஒன்றியத்தின் நிருவாக உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.











# மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை இன்று யாழ் வரும் ஜனாதிபதி எடுக்க வேண்டும்

## இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் வேண்டுகோள்



யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வடக்கில் உள்ள

பொதுமக்களின் காணிகளை முழுமையாக விடுவிப்பதற்குத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். அது மட்டுமின்றி சைவ சமயத்தவர்களின் வணக்க ஸ்தலங்களையும் விடுவிக்க வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இன்று யழ்ப்பாணம் வருகின்றமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதைக் குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு முதலாம் திகதி வருகை தந்து பல திட்டங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளார் என அறிகின்றோம். அவரது வருகை ஆக்கபூர்வமாக அமைய வேண்டுமானால் நீண்ட காலப் போரினால் பொதுமக்களின் காணிகள் இராணுவத்தினரின் பயன்பாட்டில் அவர்களது ஆதிக்கத்தின் கீழ் உள்ளன. இத்தகைய காணிகள் பொது மக்களின் பயன்தரும் நிலங்களாகும். பல வளங்களைக் கொண்டவையாகும். அத்தகைய காணிகளை விடுவிப்பதன் மூலம் மக்கள் தமது அன்றாட தேவைகளை தாங்களே நிறைவேற்றிக் கொள்ள முடியும். யாரையும் எதிர்பார்க்க வேண்டிய தேவை இருக்காது. எனவே இந்த மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இது மட்டுமன்றி காங்கேசன்துறைக் கடற்கரையில் புராதன அடையாளமாக விளங்கிய சுக்கிரபாத திருகோண சக்கர சத்திரம் இடிக்கப்பட்டு அந்த இடத்தில் தல்சவன விருந்தினர் விடுதி அமைக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. மேலும் காங்கேசன்துறை கீரிமலையில் அமைந்துள்ள சடையம்பாள் மடம் மற்றும் ஆதிசிவன்கோவில் இடித்து அழிக்கப்பட்டுள்ளன. இவற்றை மீளக் கட்டுவதற்கும், விடுவிக்கப்படாமல் உள்ள இந்து மக்களின் பல புராதன மடங்கள், ஆலயங்கள் விடுப்பதற்கும் யாழ் வரும் ஜனாதிபதி துரித நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மக்களின் அடிப்படை தேவைகளில் ஒன்றாக இந்த நிலங்கள் இருக்கின்றமையால் ஜனாதிபதி நல்லெண்ண செயற்பாடக இவற்றை விடுவிப்பதற்கு துரித நடவடிக்கைகளைத் தமது யாழ். விஜயத்தின் போது காண்பிக்க வேண்டும். – என்றார்.

# மட்டக்களப்பில் 3 சிறுமிகள் மீது துஷ்பிரயோகம் இரு சிறுமிகள் கர்ப்பம்; இரு சிறுவர்கள் கைது!



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசங்களில் 3 சிறுமிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை ஒரு வார காலத்துக்குள் தெரிய வந்திருக்கின்றது.

இதில் 13-17 வயதுகளுடைய இரு சிறுமிகள் கர்ப்பம் தரித்துள்ளனர் எனவும், இரு சிறுவர்களை கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்டத்திலுள்ள ஒரு பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசம் ஒன்றில் சில தினங்களுக்கு முன்னர் வாந்தியெடுத்த 17 வயதுச் சிறுமி ஒருவரை வைத்தியசாலையில் சேர்த்தபோது அவர் 3 மாதக் கர்ப்பிணியாக இருக்கின்றமையை வைத்தியர்கள் கண்டறிந்தனர்.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது, அந்தச் சிறுமியின் தாயும் தந்தையும் மீன்பிடித் தொழிலுக்காக கடற்கரைப் பகுதியில் மீன் வாடியில் இருந்து வருகின்றனர் எனவும், வீட்டில் சிறுமியும் அவரது சகோதரரும் தங்கியிருந்து வருகின்றனர் எனவும் தெரிய வந்தது.

கடந்த 3 மாத்திற்கு முன்னர் சம்பவதினம் சிறுமி வீட்டிற்கு இரவு வீதியால் நடந்து வரும்போது இருட்டில் வந்த ஒருவன் தன்னை இழுத்துச் சென்று துஷ்பிரயோகம் செய்தான் எனவும், அவனை அடையாளம் தெரியாது எனவும் பொலிஸ் விசாரணையின் போது சிறுமி தெரிவித்துள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை அதே பொலிஸ் பிரிவில் 13 வயது சிறுமி ஒருவரை 3 மாத கர்ப்பிணியாக்கிய 17 வயது சிறுவன் ஒருவனை பொலிஸார் கைது செய்ததனர். இதன் போது கைது செய்யப்பட்ட சிறுவன் நான் இதற்கு காரணம் அல்லன், எனது நண்பன்தான் இந்த சம்பவத்துக்குக் காரணம் எனவும் தெரிவித்துள்ள நிலையில், அந்தச் சிறுமியோ இல்லை இவன்தான் காரணம் என முறைப்பாட்டில் கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட சிறுவனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து, 14 நாள்கள் தடுத்து வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் மாவட்டதிலுள்ள இன்னொரு பொலிஸ் நிலையப் பிரிவின் கீழ் உள்ள பிரதேசம் ஒன்றில் 15 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தான் எனக் கூறப்படும் 17 வயதுச் சிறுவனைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். சிறுவனை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இவ்வாறு 3 சிறுமிகள் மாவட்டத்தில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் செய்திகள் ஒரு வார காலத்துக்குள் வெளியாகியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மண்டைதீவு மைதானத்துக்குக் காட்டுகின்ற கரிசனையை மண்டைதீவு மனிதப்புதைகுழி தொடர்பிலும் காட்டுங்கள்!

## வேலணை பிரதேச சபை உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் கோரிக்கை



மண்டைதீவு சர்வதேச கிரிக்கெட் மைதானத்திற்கு அடிக் கல் நாட்ட இன்று வரும் ஜனாதிபதி மண்டைதீவு மனிதப் புதைகுழி தொடர்பிலும் கரிசனை செலுத்த வேண்டும் என வேலணை பிரதேச சபை உறுப்பினர் சுவாமிநாதன் பிரக லாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே இதனை அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மண்டைதீவில் சர்வதேச துடுப்பாட்ட மைதானத்திற்கு அடிக்கல் நாட்டுவதற்காக ஜனாதிபதி அநுர குமார திஸ ாநாயக்க வருகிறார். அந்த இடத்தில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்துக்குள்தான் மண்டைதீவு மனிதப் புதைகுழி கள் காணப்படுகின்றன.

மண்டைதீவில் இரண்டு மனிதப் புதைகுழிகள் உள்ளன. அவை அகழப்படப்பட்டு நீதியான விசாரணைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என இந்த மாதம் 20ஆம் திகதி வேலணை பிரதேச சபை அமர்வில் பிரேரணை ஒன்றை முன்வைத்திருந்தேன். அது தீர்மானமாக நிறைவேற் றப்பட்டது.

கடந்த 26 ஆம் திகதி மண்டைதீவு மனித புதைகுழியின் 36 ஆம் ஆண்டு நினைவு தினத்தை புதைகுழி உள்ள இடத்தில் நினைவுகூர்ந்து இருந்தோம். எனவே நமது தீர்மா னத்தின்படி புதைகுழி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

மண்டைதீவுக்கு வரும் ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க, மண்டைதீவு மனிதப்புதைகுழிகள் தொடர்பிலும் கரிசனை செலுத்த வேண்டும்.

ஜனாதிபதி செம்மணி மனித புதைகுழிக்கு விஜயம் செய்வார் என கடற்றொழில் அமைச்சர் சொல்லியிருக்கிறார். ஆகவே மண்டைதீவுக்கு வருகின்ற ஜனாதிபதி மண்டைதீவு மனிதப் புதைகுழியையும் பார்வையிட வேண்டும் என எதிர் பார்க்கிறோம்.

மண்டைதீவு மனிதப் புதைகுழி அகழ்வு பணிகளை விரைவில் ஆரம்பிக்கவும், நிதி ஒதுக்கீடுகளை செய்யவும், நீதியான விசாரணைகளை முன்னெடுக்கவும் ஜனாதிபதி ஒத்துழைக்க வேண்டும் – என்றார்.

# இனியபாரதியின் இரு நெருங்கிய சகாக்கள் கைது! ஒருவர் கல்முனையில்; மற்றவர் கட்டுநாயாக்காவில்!



(கனகராசா சரவணன்)

இனியபாரதியின் கல்முனையைச் சோந்த சகாவான டிலக்ஷன் கல்முனை யில் வைத்து நேற்று முன்தினம் சனிக் கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவின ரால் கைது செய்யப்பட்டார். அதே நேரம் வெளிநாட்டுக்குத் தப்பி ஓடமுயற்சித்த காரைதீவைச் சேர்ந்த இன்னொரு சகா வான வன்னியசிங்கம் பரமேஸ்வரன் கட்டுநாயக்கா விமான நிலையத்ததில் வைத்து கடந்த இருவராங்களுக்கு முன் னர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

2007-6-28 ஆம் திகதி திருக் கோவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக படு கொலை செய்யப்பட்ட பிரதேசசபை தவிசாளரின் மனைவி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த இனியபாரதி என அழைக்கப்படும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் முன்னாள் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவின் ஒருங்கி ணைப்பாளருமான கே.புஷ்பகுமார் மற்றும் அவரது சகாவான சசீந்திரன் தவசீலன் ஆகியோருக்கு எதிராகக் குற் றப் புலனாய்வுப் பிரிவினரிடம் முறைப் பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து சந்தேகத்தின் அடிப் படையில் கடந்த ஜுலை 6 ஆம் திகதி திருக்கோவிலில் வைத்து இனியபாரதி யையும் அவரது சகாவான மட்டு. சந்தி வெளியைச் சேர்ச்த சசிதரன் தவசீலன் என்பவரை சந்திவெளியில் வைத்தும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்தனர்.

திருக்கோவில் முன்னாள் பிரதேச சபை தவிசாளர் உதயகுமாரை கடந்த 2007-6-28 அன்று வீட்டில் இருந்து வெளியே வீதியில் சென்று கொண்டிருந்த போது வாளால் வெட்டி காயப்படுத்திய பின்னர் கைக்குண்டு வீசிப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இனியபாரதியிடம் மேற் கொண்ட விசாரணையின் அடிப்படை யில் அவரின் சகாவான கல்முனையைச் சேர்ந்த டிலக்ஷ்ன் என்பவரை சந்தேகத் தின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்து கொழும்புக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

அதேவேளை இனியபாதியின் இன்னொரு சகாவான வவுணதீவு பாவற் கொடிச் சேனையைச் சேர்ந்தவரும், காரைதீவில் திருமணம் முடித்து வாழ்ந்து வந்தவருமான வன்னியசிங்கம் பரமேஸ் வரன் என்பவர் வெளிநாட்டுக்குத் தப் பிச் செல்வதற்காக கட்டுநாயக்கா விமான நிலையம் சென்ற நிலையில் அங்கு வைத்து கடந்த 12 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட் டது.

இவ்வாறு சந்தேகத்தின் அடிப்படை யில்கைதுசெய்யப்பட்டஇருவரையும்விசா ரணைக்காகக் குற்றப் புலனாய்வுப் பிரி வினர் கொழும்பிற்குக் கொண்டு சென் றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மண்டைதீவில் மைதான அடிக்கல் நிகழ்வுக்கான ஏற்பாடுகளை நேரடியாக அமைச்சர்கள் கவனிப்பு



மண்டைதீவுவில் அமைக்கப்படவுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கான அடிக்கல் இன்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவால் நடப்பட இருக்கையில் அந்நிகழ்வின் முன்னேற்பாடுகள் தொடர்பாக விளையாட்டு துறை அமைச்சர், கடற்றொழில் அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர்.















# வவுனியாவில் பிள்ளையார் சிலையை தாண்டிக்குளத்தில் கரைக்கும் நிகழ்வு

**(கி.வசந்தன்)**

விநாயகர் சதுர்த்திக்கு வணங்கிய பிள்ளையார் சிலையை ஊர்வலமாக எடுத்துச் சென்று குளத்து நீரில் கரைக்கும் நிகழ்வு வவுனியாவில் இடம் பெற்றது.

கடந்த 27ஆம் திகதி விநாயகர் சதுர்த்தி அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் அதனை முன்னிட்டு நேற்று இந்நிகழ்வு இடம்பெற்றது.

விநாயக சதுர்த்தி தினத்தன்று மகாறம்பைக்குளம் அரசடிப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளுடன் வைக்கப்பட்டிருந்த விநாயகப் பெருமானனின் சிலை விசேட பூஜை மற்றும் விநாயக பஜனையுடன் எடுத்துச் செல்லப்பட்டு குருமன்காடு காளி கோவிலில் விசேட பூஜை வழிபாட்டுக்காக வைக்கப்பட்டது.

பின்னர், அங்கிருந்து பஜனையுடன் சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயம் மற்றும் குடியிருப்பு பிள்ளையார் ஆலயம் என்பவற்றுக்கு ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு ஏ9 வீதி ஊடாக சென்று தாண்டிக்குளம் குளத்தில் விசேட பூஜை வழிபாடுகளின் பின் குளத்து நீரில் கரைக்கப்பட்டது.

இதில் விநாயகப் பெருமானின் பக்த அடியார்கள் பலரும் கலந்து கொண்டனர்.




















# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமும் தாய்மாரின் கண்ணீரும்! விடைதான் என்ன...?



- சிவகுமார் தாயினி -

யுத்தம் முடிவடைந்து 16 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இலங்கை அரசாங்கங்கள் பொறுப்புக் கூறத் தவறியிருக்கின்றன.

தமிழ் மக்கள் மத்தியில் அவர்களது அன்றாட வாழ்வியலுடன் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் பல பிரச்சினைகள் உள்ளன. அபகரிக்கப்பட்ட நிலத்தை விடுவித்தல், சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தல், புனர்வாழ்வின் பின் விடுதலையான முன்னாள் போராளிகளை மீண்டும் கைது செய்யா வண்ணம் பாதுகாத்தல், யுத்த காலத்தின் போதும், இராணுவம் மற்றும் அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்கு ஏற்பவும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடுதல் எனப் பல பிரச்சினைகள் உள்ளன. இவை அன்றாடம் அவர்களது வாழ்வியலில் தாக்கம் செலுத்தி வருகின்றன. இதில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் என்பது ஏனையவற்றில் இருந்து வேறுபட்டதும் ஆழமாக நோக்கப்பட வேண்டியதும் ஆகும்.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் ஒக்டோபர் 30 ஆம் திகதி நினைவுகூரப்பட்டது. அனைத்துலக காணாமற்போனோர் நாள் கொஸ்டரிக்காவில் 1981 இல் தொடங்கப்பட்ட “கைதாகிக் காணாமற்போவோரின் உறவினர்களின் கூட்டமைப்பு” என்ற அரச சார்பற்ற அமைப்பினால் லத்தீன் அமெரிக்காவில் இரகசியமான முறையில் கைது செய்யப்படலை எதிர்த்து இக்கோரிக்கை முதன் முதலாக முன்வைக்கப்பட்டது. அனைத்துலக மனித உரிமை அமைப்புகள் – குறிப்பாக அனைத்துலக மன்னிப்புச் சபை, மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியன – இவ்வாறான இரகசியக் கைதுகளுக்கு எதிராக அதிக அக்கறை எடுத்துச் செயற்படுகின்றன. இவ்வாறு ஆரம்பமாகிய “காணாமல் போனோர் நாள்“ இன்று உலகின் பல நாடுகளிலும் மறைந்து போக, இலங்கையில் யுத்தம் முடிவடைந்து 16 ஆண்டுகள் கடந்த நிலையிலும் அது தொடர்ச்சியாக நினைவு கூரப்படுகின்றது. தொடர்ந்தும் நினைவு கூரவேண்டியுமுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை யுத்த காலத்தின் போது முப்படைகள், பொலிஸார் மற்றும் புலனாய்வுத் துறையினரால் சந்தேகத்தின் பேரிலும், சுற்றி வளைப்புக்களின் போதும் கைது செய்யப்பட்டவர்களும், இறுதி யுத்தத்தின் போது அரசாங்கத்தினதும், இராணுவத்தினதும் அறிவிப்புக்கு அமைய பலர் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டோருமே காணாமல் ஆக்கப்பட்டோராகவுள்ளனர். சுமார் 16 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் வரையிலானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச நிறுவனங்களினதும், மனிதவுரிமை செயற்பாட்டாளர்களினதும் அறிக்கைகளின் மூலம் அறிய முடிகின்றது. இந்த எண்ணிக்கையை சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியவில்லை. இவர்களுக்கான தீர்வு என்பது இன்று வரை கானல் நீராகவே உள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் காணாமல் ஆக்கப்படுவோர் குறித்து காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடிய அரசியல் புறச் சூழல் காணப்படவில்லை. ஆனால் இன்று யுத்தம் முடிந்து 16 வருடங்கள் கடந்து விட்ட போதும் அதில் உள்ள முன்னேற்றம் என்பது கண்துடைப்புக்களுடனேயே உள்ளது. முன்னைய மஹிந்த அரசாங்கமானது யுத்த மோதல்களின் போது எந்தவிதமான மனித உரிமை மீறல்களும் இடம்பெறவேயில்லை என அடியோடு மறுத்ததுடன், மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்பு கூறலைப் புறந்தள்ளியிருந்தது. ரணில் – மைத்திரி கூட்டரசாங்கமானது பொறுப்பு கூறுவதற்கான ஐ.நா மனித உரிமைப் பேரவையின் இரண்டு பிரேரணைகளை ஏற்று அவற்றை நிறைவேற்றுவதற்கு இணை அனுசரணையும் வழங்கியிருக்கின்றது. ஆயினும் சர்வதேச அழுத்தத்தை குறைப்பதற்காகவும், கால நீடிப்புக்கள் ஊடாக அதனை நீர்த்துப் போகச் செய்வதற்காகவும் அது முயன்றதே தவிர அதில் எந்த முன்னேற்றத்தையும் அவதானிக்க முடியவில்லை.

காணாமல் போனோருக்கான செயலகம் தொடர்பில் ஐ.நா. பரிந்துரையை ஏற்று கடந்த கால அரசாங்கத்தினால் சட்டமூலம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. காணாமல் போனோருக்கான செயலகம் உருவாக்குதல் மற்றும் நிர்வாகமும் கடமைகளை நிறைவேற்றலும் என்ற பெயரிலான அந்த சட்டம் நடைமுறைக்கும் வந்துள்ளது. இருப்பினும் அந்த அலுவலகம் குறித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளும், மனிதவுரிமையாளர்களும், சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்திருக்கின்றனர். இந்த அலுவலகத்தின் கடந்த கால செயற்பாடுகளைப் பார்க்கின்ற போதும் அது வெறும் கண்துடைப்பு அலுவலகமாகவே இருக்கின்றது என்பது புலனாகின்றது.

தற்போதைய அநுரகுமார திஸநாயக்கா தலைமையிலான அரசாங்கம், தேர்தலின் போது காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி வழங்கப்படும் என உறுதியளித்த நிலையில் இன்று ஆட்சிப் பீடம் ஏறி மாதங்கள் பல கடந்த நிலையிலும் அது குறித்து மௌனமாக இருப்பது கடந்த அரசாங்கத்தைப் போன்றே இவர்களது செயற்பாடும் அமையப் போகின்

தொடர்ச்சி▼



# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமும் தாய்மாரின் கண்ணீரும்! விடைதான் என்ன...?

தொடர்ச்சி▲

நதா என்ற கேள்வியை பாதிக்கப்பட்ட மக்களிடத்தில் தோற்றுவித்துள்ளது. ஐ.நாவைக் கையாள இந்த அரசாங்கம் எவ்வாறு செயற்படப் போகின்றது என்ற எதிர்பார்ப்பும் மக்களிடத்தில் எழுந்துள்ளது.

அவர்கள் இறந்து விட்டார்கள் என்றால் ஒரேயடியாக அழுது தீர்த்து விதியைத் திட்டி கண்ணீரால் காயத்தை ஆற்றிவிடலாம். அவர்களுக்குரிய கிரியைகளை நடத்தி ஆத்மசாந்திக்காக வழிபடலாம். ஆனால் நம் உறவுகளுக்கு என்ன நடந்தது, உயிரோடு இருக்கிறார்களா, இல்லையா, இன்று வருவார்களா, நாளை வருவார்களா எனத் தினம் தினம் எதிர்பார்ப்போடு செத்துப் பிழைப்பது எத்தனை கொடுமையானது? இந்த நிலைமை வார்த்தைகளுக்குக் கட்டுப்படாதது. அனுபவிப்பர்களால் மட்டுமே உணர்ந்து கொள்ளக்கூடிய துயரத்தின் உச்சம் அது. அந்த உச்சக் கட்டத் துயரத்துடனேயே காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது பிள்ளைகள், தமது கணவன்மார், மனைவிமார், உறவுகள் மீள வருவார்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கின்றனர். அவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை எண்ணி தினம் தினம் செத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

கால நீடிப்புக்களும், இழுத்தடிப்புக்களும் செய்து, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் அசாங்கம் யாருக்கு பொறுப்புக் கூற போகிறது? காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடி அலைத்து திரிந்து, நாளாந்தம் போராட்டம் நடத்திய தாய்மார் மரணித்து வருகிறார்கள். அவர்கள் தமது பிள்ளைகளின் முடிவு தெரியாமலேயே தமது உயிரையும் மாய்த்து விட்டார்கள். இந்த நிலையை நீடிக்க விடுவதா அல்லது அந்த மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதா என்பதை தமிழ் தலைமைகளும் உணரவேண்டும்.

வடக்கு, கிழக்கு பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என வலியுறுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டங்கள் 3,100 நாட்களைக் கடந்தும் சென்று கொண்டிருக்கின்றது.

அனைத்துலக காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் வடக்கில் யாழ்ப்பாணத்திலும், கிழக்கில் மட்டக்களப்பிலும் என பாரியளவிலான போராட்டங்களும், ஊர்வலங்களும் நடைபெற்றிருக்கின்றன. மக்களின் கண்ணீரால் அந்தப் பிரதேசங்கள் தினமும் நனைந்து கொண்டிருக்கின்றன. போராட்டங்களில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளும், தமிழ் தேசிய தலைமைகளால் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளும் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன. அந்த மக்கள் அரசாங்கம் மீதும், தமிழ் தலைமைகள் மீதும் அதிருப்தி கொண்டவர்களாக மாறியிருக்கின்றார்கள். தொடர் போராட்டங்களால் உடல், உள ரீதியாகவும் கடுமையாக பாதிப்படைந்திருக்கின்றார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பலர் சிறைச்சாலைகளிலும், இராணுவ தடுப்பு முகாம்களிலும் மற்றும்

தொடர்ச்சி▼





# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமும் தாய்மாரின் கண்ணீரும்! விடைதான் என்ன...?

தொடர்ச்சி▲

சித்திரவதைக் கூடங்களிலும் இருக்கின்றார்கள் என ஆதாரங்கள் பலவும், தகவல்களும் வெளியாகியிருந்த நிலையில் கூட அவர்களை விடுவிப்பதற்கும், அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்கும் சர்வதேச அழுத்தத்தின் ஊடாக இலங்கை அரசாங்கத்தை பதில் அளிக்க வலியுறுத்தாத நிலையில் தமிழ் தேசியக் கட்சிகள் இருப்பது என்பதும் நம்பிக்கையோடு இருக்கும் அந்த மக்களின் மனங்களில் பலத்த சலனங்களை உருவாக்கியிருக்கிறது.

நாடு கடந்த நிலையில் புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழ் உறவுகள் கூட தமது நாட்டையும், மக்களையும் நேசித்தவர்களாக இந்த நாட்டில் இடம்பெற்ற உரிமைப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும், அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என வலியுறுத்திய போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள். அதில் பல தமிழ் உணர்வாளர்கள் கலந்து கொண்டு தமது உறவுகளுக்காகக் குரல் கொடுத்திருந்தார்கள். ஆனால் இங்கு பாதிக்கப்பட்ட அந்த மக்களது வாக்கில் பதவிகளையும், சொகுசு வாழ்க்கையும் பெற்று வலம் வரும் அந்த மக்களின் தலைவர்கள் நடந்து கொள்ளும் விதத்தை பார்க்கும் போது மிகவும் வேதனையாகவே இருக்கிறது.

ஆக, இந்த நாட்டில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தை இந்த அரசாங்கம் சிரத்தையுடன் கையாள்வதாக தெரியவில்லை. இரகசிய தடுப்பு முகாம்கள், சிறைச்சாலைகள் என தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் பெயர் விவரங்களை வெளியிட்டு அவர்களை அவர்களது குடும்பத்துடன் இணைக்க வேண்டும். தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் சில இரகசிய வதை முகாம்கள் தொடர்பில் பேசப்பட்டு வருகின்றது. முன்னாள் கடற்படைத் தளபதி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். காணாமல் ஆக்கப்பட்டோர் கொல்லப்பட்டிருந்தால் அவர்களுக்கான இழப்பீடு சர்வதேச சட்ட நியாயங்களுக்கு ஏதுவான நிலையில் வழங்கப்பட வேண்டும். அவர்கள் உயிருடன் இந்த காலப்பகுதியில் உழைத்திருக்க கூடிய பணத்தை வழங்குவதன் மூலமும் அவர்கள் கொல்லப்பட்ட காலப்பகுதியில் இருந்து அவர்களுக்கான ஓர் ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் அந்தக் குடும்பங்களின் பொருளாதார நிலையை என்றாலும் குறைந்த பட்சம் தீர்க்க முடியும். ஓர் உயிருக்கான விலை பணம் என்பது அல்ல. ஆனால் கொல்லப்பட்டிருந்தால் அதற்குரிய பரிகாரமாக இழப்பீடு வழங்கப்படுவதும் அந்த கொலைக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படுவதும் கட்டாயமானதே. இதன் மூலமே மீள நிகழாமையை உருவாக்க முடியும்.

# யாழில் லஞ்சம் பெற முயன்ற அரச அதிகாரிகள் மூவர் கைது!

யாழ்ப்பாணத்தில் லஞ்சம் பெற முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் சங்கானை மதுவரித் திணைக்கள அலுவலக அதிகாரிகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபாலவின் கீழ் இயங்கும் குற்றப்புலனாய்வு திணைகள அதிகாரிகளால் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாதகல் பகுதியில் ஹெரோயினுடன் சந்தேகநபர் ஒருவரை கைது செய்வதற்கு மதுவரித்திணைக்கள அதிகாரிகள் முயற்சித்துள்ளனர்.

இதையடுத்து, அவரைக் கைது செய்யாமல் விடுவதற்காக 30 லட்சம் ரூபா லஞ்சம் கோரியுள்ளனர். இந்தநிலையில் போதைப் பொருளை வைத்திருந்தவர் 20 லட்சம் ரூபா லஞ்சம் வழங்குவதற்கு ஒத்துக் கொண்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இதன்பின்பு, அவர்கள் சந்தேக நபரை விட்டுவிட்டு லஞ்சப் பணத்தை சித்தங்கேணி பகுதியில் உள்ள மதுவரித்திணைக்கள அலுவலகத்திற்குக் கொண்டு வருமாறு கூறிவிட்டுச் சென்றுள்ளார்கள்.

போதைப்பொருள் வைத்திருந்தவரின் தரப்பினர் இதுகுறித்து காங்கசன்துறை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினருக்குத் தகவல் வழங்கிவிட்டு லஞ்சத்தை கொடுப்பது போல் பாசாங்கு செய்வதற்காக அவர்களது அலுவலகத்துக்குச் சென்றுள்ளனர்.

அங்கு லஞ்சத்தை கொடுப்பதற்கு முயற்சித்தவேளை குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால், மதுவரி திணைக்கள அதிகாரிகள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அதிகாரிகள் மூவரிடமும் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளையடுத்து, அவர்கள் மூவரும் மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் எனக் கூறப்பட்டது.



# இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகளின் மீள்வருகைக்குத் தடையா?

- ந.சதாசிவஐயர் -
(ஓய்வு பெற்ற மேலதிக பதிவாளர் நாயகம்)

இலங்கையில் ஏற்பட்ட நெருக்கடிகாரணமாக அகதிகளாக இந்திய முகாங்களில் வசிப்பவர்கள் மீளவருவதில் தோன்றியுள்ள நெருக்கடி மிகவும் அதிர்ச்சி தருவதாகவும் கவலை தருவதாகவும் உள்ளது.

நான் பதிவாளர் திணைக்களத்தில் கடமையாற்றியபோது இந்திய அகதிமுகாம்களில் பிறந்த பிள்ளைகள் பெற்றாருடன் சிரமமின்றி இலங்கை வருவதற்கு உதவியாக செயற்பட்ட "ஒபர்" நிறுவனத்துடன் இணைந்து அவர்களின் பிறப்பை பதிவதில் உற்சாகமாகச் செயற்பட்டேன்.

தந்தை செல்வநாயகம் அவர்களின் புதல்வர் சந்திரகாசன் அவர்களால் "ஒபர்" எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. சூரியகுமாரி அவர்களின் தலைமையில் செயற்படுகிறது. அதன் அலுவலகம் தற்போதும் தெகிவளை ஹில் வீதியில் உள்ளது. இந்தியாவிலும் அலுவலகம் உள்ளது.

இந்திய அகதிமுகாம்களில் உள்ளோரின் நலனில் அக்கறையாகச் செயற்படுபவர்கள்.

2004 ல் அகதி முகாம்களில் பிறந்த இலங்கை பிள்ளைகளுக்குப் பிறப்புச்சான்று பெற்றுக்கொடுப்பதில் அக்கறையுடன் செயற்பட்டனர்.

அப்போதய ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதன் விளைவாக அவர்களுக்கு உதவ பதிவாளர் நாயகம் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது. இந்திய அகதிமுகாம்களில் பிறந்த பிள்ளைகளின் பிறப்பைப் பதிய வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தோம். சென்னையில் உள்ள துணைத. தூதுவருக்கு காலம் கடந்த பிறப்பைப் பதிவதற்கும் உதவுமுகமாக உதவி பதிவாளர் நாயகத்தின் அதிகாரமும் வழங்கப்பட்டது. அதற்குத் தேவையான வழிகாட்டல்கள் படிவங்கள் யாவும் அனுப்பிவைக்கப்பட்டன. அதேவேளை பிறப்பை பதியாமல் இலங்கை திரும்பியவர்களின் பிறப்பை உரிய முறையில் இலவசமாக பதிந்து கொடுக்க "ஒபர்" நிறுவனம் இலங்கையில் பல இடங்களில் நடமாடும் சேவைகளையும் எம்முடன் இணைந்து நடாத்தினர்.

அதேவேளை பதினெட்டு வயதடைந்தவர்களுக்கு பிரஜாஉரிமைச் சான்று பெற்றுக்கொடுக்கவும் அடையாள அட்டை பெற்றுக்கொடுக்கவும் பல நடமாடும் சேவைகளை நடத்தியமையுடன் அதுதொடர்பான சகல செலவுகளையும் கட்டணங்களையும் அவர்களே ஏற்றுக்கொண்டனர்.

அதற்கும் மேலாக கடல் வழியாக சென்று கடல்வழியாகவே வந்தவர்களின் பிள்ளைகளுக்கும் சட்டப்படியான ஆவணங்கள் பெற்றக்கொடுக்க கருணையுடன் ஆவன செய்யப்பட்டன.




"ஓபர் சிறிலங்கா" நிறுவனம் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்துடன் இணைந்து ஜனாதிபதி முதல் அமைச்சர்கள், வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு, பதிவாளர் நாயகம் திணைக்களம், ஆள்பதிவுத் திணைக்களம், குடிவரவு, குடியகல்வு திணைக்களங்கள் என்பன இணைந்து 2004 முதல் ஆற்றிவரும் சேவை தவறானதா?

நடமாடும் சேவைகளில் வைத்து அகதிகளாக சென்று வந்தவர்களின் அகதிமுகாம்களில் பிறந்த பிள்ளைகளுக்கு பிரஜா உரிமைச்சான்றுகளை வழங்கிய அதே திணைக்கள அதிகாரிகள் தற்போதுமட்டும் மீள வருபவர்களைக் கைது செய்வது ஏன் என்பது புரிந்துகொள்ள முடியாதுள்ளது.








# எஸ்.சி.ஓ. உச்சிமாநாடு:
# பல்வேறு நாடுகளின் தலைவர்களை சந்தித்தார் பிரதமர் நரேந்திர மோடி

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டின் இடையே நேபாள பிரதமர் கே.பி. ஒளி உட்பட பல்வேறு நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து பிரதமர் நரேந்திர மோடி உரையாடினார்.

இந்நிலையில், எஸ்.சி.ஓ. உச்சிமாநாட்டுக்கு இடையே மியான்மர் பாதுகாப்பு மற்றும் அமைதி ஆணைய தலைவர் மூத்த ராணுவ ஜெனரல் மின் ஆங் ஹலைங்குடன் பிரதமர் மோடி பேச்சு வார்த்தை நடத்தினார்.

மேலும், எஸ்.சி.ஓ. உச்சிமாநாட்டின் இடையே, நேபாள பிரதமர் கே.பி. ஒளி சர்மா, மாலத்தீவு ஜனாதிபதி மொகம்மது முய்சு, எகிப்து பிரதமர் முஸ்தபா மட்போலி, பெலாரஸ் அதிபர் அலெக்ஸாண்டர் லுகாஷென்கோ, தஜிகிஸ்தான் ஜனாதிபதி இமாமலி ரஹ்மான், கஜகஸ்தான் ஜனாதிபதி டொகாயேவ், வியட்நாம் பிரதமர் பாம் மின் சின், லாவோ அதிபர் தோங்லோன், துருக்மெனிஸ்தான் அதிபர் செர்தார் பெர்டிமுகம்மது, அர்மீனியா பிரதமர் நிகோல் பஷின்யான் உள்ளிட்டோரைச் சந்தித்து பிரதமர் மோடி உரையாற்றினார்.





# இந்தியா - சீனா இடையே மீண்டும் விமான சேவை

## ஜி ஜின்பிங் உடனான சந்திப்பில் பிரதமர் மோடி அறிவிப்பு



சீனா சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி அந்நாட்டு ஜனாதிபதி ஜி ஜின் பிங்கை சந்தித்து கலந்துரையாடி யுள்ளார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்ற 15 ஆவது இந்திய, ஜப்பான் உச்சி மாநாட் டில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். இதன் பிறகு அவர் ஜப்பான் பிரதமர் ஷிகேரு இஷிபாவை சந்தித்துப் பேசி னார்.

இரு தலைவர்களும் 90 நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். இதைத் தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் டோக்கியோவில் 16 ஜப்பானிய ஆளுநர்களுடன் கலந்துரை யாடினார்.

ஜப்பான் பயணத்தை நிறைவு செய்த பிரதமர் நரேந்திர மோடி, ஷாங்காய் ஒத்து ழைப்பு அமைப்பு மாநாட்டில் பங்கேற்க செண்டாய் நகரில் இருந்து சீனாவின் தியான்ஜின் நகருக்கு விமானத்தில் சென்றார். ஏழு ஆண்டுகளுக்கு பின் சீனா சென்ற அவருக்கு விமான நிலை யத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப் பட்டது.

எஸ்.சி.ஓ. அமைப்பின் உச்சி மாநாடு சீனாவின் தியான்ஜின் நகரில் நேற்றும், இன்றும் நடைபெறுகிறது. இந்த மாநாட் டின் ஒரு பகுதியாக சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங்கை, பிரதமர் நரேந்திர மோடி சந் தித்துப் பேசினார்.

பரஸ்பர நம்பிக்கை, பரஸ்பர மரி யாதை மற்றும் பரஸ்பர உணர்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் இரு நாடு களுக்கும் இடையிலான உறவுகளை முன்னெடுத்து செல்ல உறுதி பூண்டி ருப்பதாக பிரதமர் மோடி சீன ஜனாதிபதி யிடம் தெரிவித்தார்.

இதன்போது பிரதமர் மோடி தெரிவிக் கையில்,

“கடந்த ஆண்டு, கசானில் மிகவும் அர்த்தமுள்ள விவாதங்களை நடத்தி னோம், இதன் மூலம் நமது உறவுகள் நேர்மறையானதிசையில்சென்றுகொண் டிருக்கின்றன. எல்லையில் போர் நிறுத் தத்திற்குப் பிறகு, அமைதி மற்றும் ஸ்திரத் தன்மை கொண்ட சூழல் உருவாக்கப் பட்டது.

எல்லை மேலாண்மை விஷயத்தில் நமது சிறப்பு பிரதிநிதிகளுக்கு இடையே ஒருமித்த கருத்து ஏற்பட்டுள்ளது. கைலாஷ் மானசரோவர் யாத்திரை மீண்டும் தொடங்கப்படுகிறது. இரு நாடுகளுக்கும் இடையே நேரடி விமானப் போக்குவரத்தும் தொடங்கப்படுகிறது. நமது நாடுகளுக்கு இடையிலான ஒத் துழைப்புடன், 2.8 பில்லியன் மக்களின் நலன்கள் இணைக்கப்பட்டுள்ளன. இது மனிதகுலத்திற்குத் தேவை.” என்று தெரிவித்தார்.

# சீனா - இந்தியா நண்பர்களாக இருப்பது சரியான தேர்வு என்கிறார் ஜி ஜின்பிங்



சீனாவின் தியான்ஜினில் பிரதமர் மோடியுடனான இருதரப்பு சந்திப்பின் போது, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், இரு நாடுகளும் நண்பர்களாக இருப்பது சரியான தேர்வு என்று தெரிவித்தார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் பங்கேற்க சீனாவின் தியான் ஜின் நகருக்கு பிரதமர் மோடி சென் றுள்ளார்.

எஸ்.சி,ஓ, அமைப்பின் உச்சி மாநாடு சீனாவின் தியான்ஜின் நகரில் நடை பெறுகிறது. இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங்கை, பிரதமர் நரேந்திர மோடி சந் தித்துப் பேசினார்.

அப்போது பேசிய சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்,

“சீனாவும் இந்தியாவும் கிழக்கில் உள்ள இரண்டு பண்டைய நாகரிகங்கள் ஆகும். நாம் உலகின் இரண்டு அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகள் மற்றும் உலகளாவிய தெற்கின் முக்கிய உறுப்பினர்கள் ஆவோம்.

நமது இரு நாட்டு மக்களின் நல் வாழ்வை மேம்படுத்துதல், வளரும் நாடுகளின் ஒற்றுமை, புத்துணர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் மனித சமூகத்தின் முன்னேற்றத்தை உருவாக்குதல் ஆகிய வரலாற்றுப் பொறுப்பை நாம் இருவரும் பகிர்ந்து கொள்கிறோம். நல்ல அண்டை மற்றும் நட்பு உறவுகளைக் கொண்ட நண்பர்களாகவும், ஒருவருக்கொருவர் வெற்றிபெற உதவும் கூட்டாளர்களாக வும், டிராகனும் யானையும் ஒன்றிணை வது இரு நாடுகளுக்கும் சரியான தேர் வாகும்.

இந்தியாவும் சீனாவும் பன்முகத் தன்மையை நிலைநிறுத்துவதற்கான தங்கள் பொறுப்பை வலுப்படுத்த வேண் டும். பன்முகத்தன்மை கொண்ட உல கத்தையும், சர்வதேச உறவுகளில் சிறந்த ஜனநாயகத்தையும் கொண்டு வர ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். ஆசியாவிலும் அதற்கு அப்பாலும் அமைதி மற்றும் செழிப்புக்கு நாம் பங்களிக்க வேண்டும்.

2025 ஆம் ஆண்டு சீன-இந்திய ராஜதந்திர உறவுகளின் 75 வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது. நிலையான, உறுதியான வளர்ச்சியை உறுதி செய்வ தற்காக இருதரப்பு உறவுகளை நீண்ட கால கண்ணோட்டத்தில் அணுகி கையாள வேண்டியது அவசியம்” என்று கூறினார்.

# ரஷ்யாவின் ஆதரவாளராக ட்ரம்ப் செயல்படுகின்றார்

## போர்த்துகல் ஜனாதிபதி குற்றச்சாட்டு



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், வெளிப்படையாக ரஷ்யாவின் ஆதரவாளராகச் செயல்படுகிறார் என, போர்த்துகல் ஜனாதிபதி மார்செலோ ரெபெலோ டிசோசா குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன், சர்வதேச இராணுவ அமைப்பான, நேட்டோவில் இணைய முயற்சித்தது.

இது தங்களுக்கு அச்சுறுத்தல் எனக் கூறி, உக்ரைன் மீது 2022இல் ரஷ்யா போர் தொடர்ந்தது.

இந்த போரை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முயற்சித்து வருகிறார்.

இது தொடர்பாக கடந்த ஓகஸ்ட் 15 இல் அலஸ்காவில், ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அதைத்தொடர்ந்து, வெள்ளை மாளிகையில் யுக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தலைவர்களையும் ட்ரம்ப் சந்தித்துப் பேசினார்.

இந்நிலையில், நேட்டோவில் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய நாடான போர்த்துகலின் ஜனாதிபதி மார்செலோ ரெபெலோ, உலகின் மிகப்பெரிய வல்லரசு நாடான அமெரிக்காவின் ஜனாதிபதி ட்ரம்ப், பாரபட்சமின்றி ரஷ்யாவின் கருவியாக இருப்பதாகவும், அவர் ரஷ்யாவை வெளிப்படையாக ஆதரிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனால், பாரம்பரியமாக அமெரிக்காவுடன் கூட்டாளிகளாக இருந்த யுக்ரைன் மற்றும் ஐரோப்பிய நாடுகள், தற்போது தங்கள் நலன்களைப் பாதுகாக்க அழுத்தம் தரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன எனவும், ட்ரம்ப் ஒரு தரப்புடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்த விரும்புகிறார் என்றும் போர்த்துகல் ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்; மெக்சிக்கோவில் மக்கள் போராட்டம்




மெக்சிக்கோவில் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்கத்தவறியுள்ளனர் என மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், நாடளாவிய ரீதியாக ஆயிரக்கணக்கான மக்கள் கவனயீர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள், மெக்சிக்கோ நகரம், உட்பட பல முக்கிய நகரங்களில் தொடர்ச்சியான ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மெக்சிக்கோவின் ஜனாதிபதி கிளோடியா ஷின்பாமின் இந்த விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு காணாமல் ஆக்கப்பட்ட அன்புக்குரியவர்களைக் கண்டுபிடிக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கோரியுள்ளனர்.

கடந்த 2007 ஆம் ஆண்டிலேயே பெரும்பாலானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புள்ளிவிபரங்களுக்கு அமைய ஒரு 130,000ற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளனர்.

மெக்சிக்கோவில் போதைப் பொருள்களுக்கு எதிரான பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னரே காணாமல் ஆக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

போதைப்பொருள் கும்பல்களினால் வலுக்கட்டாயமாகக் கடத்தப்பட்டு போதைப் பொருள் உற்பத்தி மற்றும் அது தொடர்பான பணிகளில் ஈடுபடுத்தப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் கொலை செய்யப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# காசா மீதான தாக்குதல்களை நிறுத்திய இஸ்ரேலிய படைகள்

காசாவை கைப்பற்றும் பாரிய தாக்குதலுக்கு முன்னதாக, காசா நகரத்தின் மீது வான்வழித் தாக்குதல்களை இஸ்ரேலியப் படைகள் நிறுத்தியுள்ளன.

அதேநேரம், நிவாரணப் பாரவூர்திகள் நுழைவதைக் குறைக்கவும் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், காசாவின் மக்களை வெளியேற்றும், இஸ்ரேலியர்களின் திட்டங்கள் சாத்தியமற்றவை என்று, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டில் அதிகரித்து வரும் எதிர்ப்பு மற்றும் காசாவில் பொதுமக்களுக்குப் பேரழிவு தரும் என்ற எச்சரிக்கைகள் இருந்தபோதிலும், இஸ்ரேல் காசா நகரத்தைக் கைப்பற்றத் தயாராகி வருகிறது.

எனினும், இஸ்ரேலிய பணயக் கைதிகளின் உயிர்களுக்கு ஆபத்து நேரலாம் என்று எச்சரித்துள்ள டெல் அவிவ்வின் போராட்டக்காரர்கள், அரசாங்கம் தனது தாக்குதலை அதிகரிப்பதற்குப் பதிலாகப் போர் நிறுத்தத்தைத் தொடர வேண்டும் என்று கோரியுள்ளனர்.

இந்தநிலையில், நேற்று முன்தினம் காசாவில் நடத்தப்பட்ட தாக்குதலில், சுமார் 47 பேர் கொல்லப்பட்டதாக காசா மருத்துவமனை தரப்புகள் தெரிவிக்கின்றன.



# இன்றைய ராசி பலன்கள் - 01.09.2025

## மேஷம்

இன்று உங்கள் பொறுமை சோதனைக் குள்ளாகும் நாள். முறையான தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் பிரியமான ஒருவருடன் மோதல் ஏற்படலாம். இன்று சிறந்த பலன்களைக் காண நீங்கள் உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும்.

கடின உழைப்பின் மூலம் தான் வெற்றி காண முடியும். பணியிடத்தில் சமயோசித புத்தியை பயன்படுத்த வேண்டியது அவசியம்.

உங்கள் மனக்குழப்பத்தை உங்கள் துணையிடம் காண்பிக்காதீர்கள். அமைதியான மனநிலையில் இருப்பது சிறந்தது.

இன்று நிதிநிலை சராசரியாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இயலாது. அதற்கு நீங்கள் சிறு கடன்கள் வாங்குவீர்கள்.

## ரிஷபம்

இன்று நீங்கள் வருத்ததுடனும் மன உளைச்சலுடனும் காணப்படுவீர்கள். உங்கள் திறமைகளை சிறந்த முறையில் பயன்படுத்தினால் முன்னேற்றம் கிட்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். திறமையாக பணியாற்ற நீங்கள் சிறப்பாக திட்டமிட வேண்டும்.

இன்றைய நாள் உங்கள் துணையிடம் கருத்துக்களை பரிமாறுவதற்கு உகந்த நாள் அல்ல. எனவே உங்கள் தொடர்புகளில் கவனம் செலுத்துவது சிறந்தது.

பங்கு வர்த்தகம் மூலம் நீங்கள் பணம் சம்பாதிக்கலாம். என்றாலும் உங்களால் அதிகமாக சேமிக்க இயலாது.

இன்று செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். அதிக நீரைப் பருகவும்.

## மிதுனம்

இன்று இழப்புகள் ஏற்படாத வகையில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். பொறுமையாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்களின் சில பணிகள் முடிக்கப்படாமல் இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் திறமையோடு முடிப்பதற்கு திட்டமிடல் அவசியம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்டு சிறிது வன்மையாக நடந்து கொள்வீர்கள்.மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

அதிக பொறுப்புகள் காரணமாக அதிக செலவுகள் காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

வயிறு உப்பசம் காரணமாக அவதிப்பட நேரலாம்.

## கடகம்

இன்று உங்கள் செயல்களில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்றைய நாளை முக்கிய முடிவுகள் எடுக்க பயன்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் பணி நிமித்தமான பயணம் காணப்படும். அதன் மூலம் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவதன் மூலம் ஒன்றாக செயல்படுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவு காணப்படும். இன்று எதிர் காலத்திற்காக பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## சிம்மம்

உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். இன்று வெற்றி காண்பதற்கு முறையாக திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை முடித்து ஒப்படைப்பதற்கு முன் கவனமாக சரி பார்க்க வேண்டும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். ஆனால் பூர்வீக சொத்து அல்லது எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. அதிகப் பணிகள் காரணமாக தலைவலி ஏற்படலாம்.

## கன்னி

இன்று சில ஏமாற்றங்கள் காணப்படும். அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். மற்றவர்கள் தரும் வாக்குறுதிகளை சார்ந்து இருக்க வேண்டாம். உங்கள் விருப்பங்கள் நிறைவேற நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்சிவசப்படுவீகள். இதனால் உங்கள் உறவில் அமைதியின்மை காணப்படும்.

பண வரவு காணப்பட்டாலும் அதிகரிக்கும் செலவுகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உடல் உழைப்பின் காரணமாக கால் வலி ஏற்படலாம். உடற் பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது நல்லது.

## துலாம்

ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் நற்பலன்களை அடையலாம். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு இன்று சிறந்தது.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே உங்கள் பணிகளை கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல்கள் காணப்படும். இருவரும் கவனமாக உரையாட வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவினங்களை சமாளிக்க வேண்டியிருக்கும்.

பரபரப்பான பணிகள் காரணமாக தலைவலி அல்லது கால் வலி ஏற்படலாம். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

## விருச்சிகம்

இன்று நீங்கள் உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தினால் உங்கள் லட்சியங்களை அடையலாம். சிறந்த பலனைக் காண இன்று கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிக்கு அங்கீகாரம் பெறுவீர்கள். உங்கள் செயல்திறன் சிறப்பாக இருந்தாலும் நீங்கள் முழு திருப்தியடைய மாட்டீர்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணத்தை கவனமாகக் கையாளவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.09.2025




இன்று தடைகளையும் கஷ்டங்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும். நீங்கள் முயற்சி எடுத்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்களின் அகந்தைப் போக்கு காரணம்மாக உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையின் உணர்வுகளை கருத்தில் கொண்டு மதிப்பது நல்லது.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. கவனம் தேவை.

தேவையற்ற எண்ணங்கள் காரணமாக குழப்பம் மட்டுமன்றி தலைவலியும் ஏற்படும்.




உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக பாதுகாப்பற்ற உணர்வு ஏற்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற நீங்கள் திட்டமிட வேண்டும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.இருவரும் மனம் திறந்து பேசிக்கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் காணப்படும்.

குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை காணப்படும். அவர்களின் ஆரோக்கியத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும்.




உங்கள் செயல்களை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும் ஒரு முடிவை செயலாக்குவதற்கு முன் ஒன்றிற்குஇரண்டு முறை யோசிக்க வேண்டும். தகவல் பரிமாற்றத்தில் குறைபாடு காணப்படும்.

சக பணியாளர்களுடன் சூடான விவாதங்கள் அல்லது அகந்தை உணர்வுகள் தலை தூக்கும். அத்தகைய சூழ்நிலையை நீங்கள் உருவாக்காமல் இருப்பது சிறந்தது.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதிநிலைமை சாதகமாக இருக்காது. தேவையற்ற செலவுகளால் கவலை ஏற்படும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். உங்கள் மனதில் நேர்மை எண்ணங்கள் காணப்படும். இதன் மூலம் நன்மைகள் நடக்கும்.

இன்று பணிகள் மும்மரமாக காணப்படும். என்றாலும் நீங்கள் உங்களுக்கு கொடுத்த பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் உறவில் அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படுகின்றது. உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். பூர்வீகச் சொத்து வகையில் எதிர்பாராத பணவரவு காணப்படுகிறது.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்றைய நாளை சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

# காலியில் 49ஆவது தேசிய விளையாட்டு விழாவில் முதல் தடவையாக தங்கம் வென்ற முல்லைத்தீவு!

(பா.சதீசன் )

காலி மாவட்டத்தில் இடம்பெற்று வரும் 49 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் வரலாற்றில் முதற் தடவையாக செல்வி.சசி குமார் ஜெஸ்மிதா முல்லைத்தீவு மாவட்டத்துக்குத் தங்கப் பதக்கத்தை வென்று பெருமை சேர்த்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பெண்களுக்கான குத்துச் சண்டைப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்று இந்த வரலாற்றுச் சாதனையைப் புரிந்துள்ளார்.

கடந்த காலங்களில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் கிடைத்தாலும் தங்கப் பதக்கம் கிடைப்பது இதுவே முதல் தடவையாகும்.

49 ஆவது தேசிய விளையாட்டு விழாவானது காலி மாவட்டத்தில் 29 ஆம் திகதி ஆரம்பமாகி நேற்று 31 ஆம் திகதி நிறைவடைந்தது.

குத்துச் சண்டைப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்த சசிகுமார் ஜெஸ்மிதாவுக்கும் அவரது வெற்றிக்குப் பக்கபலமாக இருந்த பயிற்றுவிப்பாளர் மற்றும் மாவட்ட பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளனர்.

